**கவனிக்க** .- *2015.03.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1907 - 2015 මාර්තු මස 20 වැනි සිකුරාදා - 2015.03.20

*1907 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 640 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் (கண்டி மாநகர சபையில்) இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

மத்திய மாகாண அரசாங்க சேவையில் (கண்டி மாநகர சபையில்) இரசாயன பகுப்பாய்வாளர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தகைமையுடைய அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2015.04.16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையில் (கண்டி மாநகர சபையில்) இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்.-**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர்;

(ii) மத்திய மாகாண அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், மத்திய மாகாண அரசாங்க சேவையில் (கண்டி மாநகர சபையில்) இரசாயன பகுப்பாய்வாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள், அச்சேவைப் பிரமாணக்குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தபானவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

4. **சம்பளம்.-** பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 அடிப்படையில், இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கான சம்பளத்தொகுதி SL 1-2006 ஆகும்.

**சம்பள அளவுத்திட்டம்** : ரூபா. 22,935-10×645-8×790-ரூபா 35,705

5. **பொது தகைமைகள்.-**

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல்.
(ii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 3 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவரென உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று)

6. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.-**

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் பாடத்தில் முதலாவது தரம் அல்லது இரண்டாம் தரத்தில் கௌரவ பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்;

அல்லது

(ii) பிரித்தானியாவில் அல்லது அயர்லாந்தில் இரசாயனவியலுடன் தொடர்புடைய அரச நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல்;

அல்லது

(iii) இரசாயனவியல் தொடர்பாக இதனிலும் கூடிய உயர் கல்வி அல்லது தொழிற்தகைமையினைக் கொண்டிருத்தல்.

7. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 அளவிலான ஒரு தாளின் (செ. மீ. 21×29) இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.psc.cp.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளை அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் ஒருவர் அல்லது 240,360 ரூபாவிற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை

பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்;

(இ) தற்போது அரச சேவையின் கீழ் பணியாற்றும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பத் தவறும் பட்சத்தில் அவர் தகைமையற்றவர் என கருதப்படுவார்.

(ஈ) முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக்கூறமாட்டாது.

8. **ஆட்சேர்ப்பு முறை.**- விண்ணப்பதாரிகளின் திறமையினைப் பரீட்சிப்பதற்காக முறையான நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு பின்னர் மத்திய மாகாண அரசாங்க சேவையின் (கண்டி மாநகர சபையில்) இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கு தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

9. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- நியமனத்தின் முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதி செய்யப்படும் பட்சத்தில் அவரது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்தே உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக விளக்குதல், முடிவெடுத்தல் மற்றும் நேர்முகப்பரீட்சையினை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆகியன மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல 244, கட்டுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
இணையத்தள முகவரி : www.psc.cp.gov.lk
2015, பெப்புருவரி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் (கண்டி மாநகர சபையில்) இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

☐
(அலுவலக உபயோகத்திற்கு)

1. விண்ணப்பதாரரின்
   - 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் :-------.
     ஆங்கில பெரிய எழுத்தில் : உதா : PERERA, A. B. C.
   - 1.2 முழுப்பெயர் :----.
     (ஆங்கில பெரிய எழுத்தில்)
   - 1.3 முழுப்பெயர் :----.
     (சிங்களத்தில்/தமிழில்)
2. 
   - 2.1 நிரந்தர முகவரி :----.
     (ஆங்கில பெரிய எழுத்தில்)
   - 2.2 அலுவலக முகவரி :----.
     (ஆங்கில பெரிய எழுத்தில்)
   - 2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :----.
     (சிங்களத்தில்/தமிழில்)
   - 2.4 நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

5. (i) பால் :
ஆண் - 0
பெண் - 1 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

(ii) நீங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்பினூடாகவா அல்லது பதிவின் மூலமா? :----.

6. சிவில் அந்தஸ்து :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

7. (i) பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

(ii) 2015.04.16 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----- மாதங்கள் :------ நாட்கள் :------

8. கல்வித்தகைமைகள் :----.
9. ஏனைய தகைமைகள் :----.
10. பெற்ற அனுபவங்கள் பற்றிய விபரம் :----.
11. நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் குற்றத் தீர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளீர்களா? ஆம்/இல்லை
ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் :----.
12. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் தவறாகக் காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் தவறு நியமனத்திற்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்த விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :
இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் ...................... என்ற முகவரியில் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ................................. என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ...................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தியவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**குறிப்பு**: தற்போது அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

14. விண்ணப்பதாரி அரச அலுவலர் ஒருவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பதாரியினால் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் தரப்பட்ட தகவல்கள் சரியானவை எனவும் அவரது கடமை மற்றும் நடத்தை திருப்திகரமானதெனவும் இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இப்பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிப்பதற்கு இயலும்/இயலாது என்பதை அறியத்தருகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோக முத்திரையும்.

திகதி :----.
உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

3-457